ஈழநாதம்
EELANATHAM
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் - 08
நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 17 | 31-03-2003 | திங்கட்கிழமை | ஓசை 41

வசந்தம் வீசும்
புடவை உலகில் உங்களின்
நட்புக்கு.....
சாந்தா ரெக்ஸ்
பஜார் வீதி, வவுனியா
T.P:24-22879

# தேசியத் தலைவரைப் பலப்படுத்தியவாறு சமாதான முயற்சியில் வெற்றி பெறுவோம்!

**- பெண்கள் தேசிய எழுச்சி மாநாட்டில் கேணல் கருணா**

(மட்டக்களப்பு)

**தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கரங்களைப் பலப்படுத்திய வாறு இன்றைய சமாதான முயற்சிகளில் வெற்றிபெறுவோம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்துள்ளார்.**



மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த பெண்கள் தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் இன்று எந்தச் சவாலையும் எதிர்கொள்ளக் கூடிய பலமான நிலையில் உள்ளோம். எம்மிடம் நல்ல படைபலம் உள்ளது. எனவே அச்சம் கொள்ளத் தேவையில்லை. இந்த விடுதலைப் போராட்டம் என்பது தலைவர் அவர்களினால் தொடக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த நிலையில். இந்த விடுதலைப் போராட்டம் ஊடாக நாங்கள் பல அனுபவங் களைப் பெற்றுள்ளோம். பல சாதனைகளைப்

(08ஆம் பக்கம் பார்க்க)





பெண்கள் எழுச்சி மாநாட்டின்போது நடைபெற்ற கலைநிகழ்வு.

**- கோட்டை ரயில் நிலையம் முன்பாக -**

## சமாதானத்திற்கான சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள சமாதானத் துக்கான சத்தியாக்கிரகம் வரும் 5ஆம் திகதி காலை 8 மணி முதல் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சத்தியாக்கிரகம் தொடர்பான கூட்டம் கொழும்பில் ஏற்பட்டது. இக் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன் உரை யாற்றியபோது.

சமாதானத்தை எதிர்க்கும் சக்திகள் தலைதூக்கி வருகின்றன எனவும் அதனை எதிர்க்க வேண் டிய தேவை இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும் இந்த சக்திகள் தொடர் பாக நாட்டில் உள்ளவர்களும் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த வர்களும் உன்னிப்பாக அவதா னித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சந்திரசேகரன் தெரிவித்தார்.

## காருடன் விபத்துக்குள்ளாகி மோட்டார் சைக்கிள் பலத்த சேதம்

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் காரொன்று முன்னால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிள் சேதமடைந்த துடன். மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று முன் தினம் பி.ப.5.30 மணிக்கு கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தி

(08ஆம் பக்கம் பார்க்க)

**- திருகோணமலையில் -**

## கலைபண்பாட்டுக் கழகத்தின் இசை, நடன, நாடகவிழா

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலையில் விடு தலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் இசை, நடன, நாடக விழா ஒன்று நடாத்தப்பட வுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை, திருகோண மலை உவர்மலை விவேகானந்தா வித்தியாலயத்தில் இடம்பெற வுள்ள இவ் இசை, நடன, நாடக விழாவில் தமிழகத் தைச் சேர்ந்த மூன்று கலைஞர் களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நானூறுக்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்கு பற்றுவதோடு இரண்டு சிங்கள மொழி நாடக நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (பா)

**ஈராக்கின் தற்கொலைத் தாக்குதலை அடுத்து**

## பாக்தாத் மற்றும் ஈராக் பகுதிகள்மீது சரமாரியான விமானக்குண்டு வீச்சு!

அமெரிக்கப் படையினர்மீது ஈராக் படையினர் நடத்திய தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்க துருப்புக் கள் விமானங்கள் மற்றும் ஏவு கணைகள் கொண்டு ஈராக் தலை நகர் பாக்தாத்தையும் நஜாப் நஸ்ரியாப் நகரப் பகுதிகளையும் சரமாரியாகக் தாக்கி வருகின்றது. இந்நகர்கள் மீதும் அவற்றின் புறநகர்ப்பகுதிகள் மீதும் நேற்று நடந்த தாக்குதல்களில் நகரங்கள் தொடர்ந்து அதிர்ந்த வண்ணமுள் ளன.

நேற்று முன்தினம் ஈராக்கியர் நடத்திய தற்கொலைத் தாக்குதல் அமெரிக்க தரப்பில் குழப்பத்தை

(08ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.படைகள் மீது தொடர்ச்சியாக தற்கொலைத்தாக்குதல் நடத்தப்படும்

***- ஈராக் அறிவிப்பு***

ஈராக்கை கைப்பற்றும் முயற்சி யில் தீவிரம் காட்டிவரும் அமெரிக்க கூட்டுப்படையினர் மீது தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று ஈராக் அறிவித்துள்ளது.



தற்கொலைத் தாக்குதல் அச்சம் காரணமாக ஈராக்கியரை கடும் சோதனையிடும் பிரிட்டிஷ் இராணுவம்

முதன் முதலாக நேற்று முன் தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை அடுத்து, ஈராக் இவ் அறிவிப்பை விடுத்துள்ளது.

இதன் போது நான்கு கூட்டுப் படையினர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் நஜாப் நகரிற்கு அருகே நேற்றுமுன் தினம் வாடகைக்கார் ஓட்டுநர் போல் சென்ற தற்கொலைதாரரே இத் தாக்குதலை நடத்தியிருந்தார்.

இதனால் உதவி நாடிவந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## நோபல் பரிசு பெறுவதற்கு பிரதமர் ரணில் முயல்கின்றார்!

**- சனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு**

பிரதமர் ரணில் நோபல் பரிசு பெறுவதற்கு முயற்சி செய்வதாக சனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் லண்டன் கிளையின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு கூறியுள்ளதுடன்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

சில்லறைப் பணம் எமக்குத் தேவையாக உள்ளது. 1000ரூபா தருபவர்களுக்கு 50ரூபா வீதம் வழங்கப்படும் தொடர்புகளுக்கு மதி உணவகம், பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு. (சி-7729)

## திருட்டு

உடுத்துறையில் கடந்த வெள்ளி இரவு பொன்னையா என்பவருடைய வீட்டில் ஒரு சங்கிலியும், பணமும் திருடர்களினால் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம் குறித்து வடமராட்சி கிழக்கு காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (11)

# எமது சமூகத்தில் கணினி அறிவு வீட்டுக்கு வீடு பரவவேண்டும்

## கணினிக் கருத்தமர்வில் பாலகுமாரன்

(அலுவலக செய்தியாளர்)

எமது சமூகத்தில் கணினி அறிவு வீட்டுக்கு வீடு நிச்சயமாகப் பரவவேண்டும். அனைத்து வீடுகளிலும் கணினி இணைக்கப்படுகின்ற அளவுக்கு எமது வாழ்க்கை நவீன மயப்படுத்தப்பட வேண்டும் என விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் அவர்கள் தெரிவித்தார். தமிழீழ மாணவர் அமைப்பின் நடுவப்பணியகத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற கணினிக் கருத்தமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ;

எமது பகுதிகளுக்கு பலகாரணங்களுக்காக கணினிகள் மறுக்கப்பட்டிருந்தது பயில்வதற்கு தடை செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக நாம் கணினி அறிவில் பின் தங்க வைக்கப்பட்டோம். இன்று எம்மைச் சுற்றி இடப்பட்டிருந்த முற்றுகைகளை நாம் முறியடித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், நாம் அத்தகைய முற்றுகையை மேலும்முற்றாக முறியடிக்கும் வகையில் எமக்கு தளம் அமைப்பதற்கு வேண்டிய தரவுகளை இவர்கள் செய்வது எமக்கு மகிழ்வைத் தருகிறது. எங்களுடைய சிக்கல்கள் தீரவில்லை. போர் மேகங்கள் இன்னமும் கலையவில்லை. போர் இன்னும் நிறுத்தப்பட வில்லை.' வேறு பிரச்சினைகள் வரலாம் அல்லது வராமல் விட லாம். அப்படி போர் வந்தாலும் சரி வராமல் விட்டாலும் சரி நாம் தொடர்ந்து செல்கின்ற பாதை, நாம் இப்போது கற்றுக்கொள்ளும்- சேர்த்துவைக் கின்ற அறிவுச் செல்வங்களை, வளங்களைஅடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். நாம் கற்றுக் கொள்கின்ற கல்விச் செல்வத்தை யாராலும் என்றைக்கும் பறித்துக் கொள்ளமுடியாது. கல்விச் செல்வம் எமக்குள் என்றுமே வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு செல்வம். கருவிகளை நாம் எப்போதும் எப்படியாவது பெற்றுக் கொள்ளமுடியும். கணினிக்காக நாம் படை எடுப்பைக் கூட நடத்தலாம். ஆயுதங்களைப் பெற நாம் எடுத்த அதே முயற்சியை கணினி என்ற ஆயுதத்தைப் பெறுவதற்கும் எடுப்போம். இதுவல்ல எமக்குள்ள சிக்கல். எமக்குத் தேவை அறிவு. அதற்குரிய முயற்சி இப்போது எடுக்கப்படுகிறது. பழம் பெரும் காலத்தில் எண்களின் முக்கியத்தைக் கண்டவன் தமிழன் பழங்கா லத்தில் எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் எனக் கூறுவார்கள், எனவே கணினி எண்களுடன் சம்பந்தமான விடயம்.

இத்தகைய விடயங்கள் தமிழர் பக்கங்களிலும் இருந்தது அவற்றை நாம் மீளக்கற்றுக்கொள்ளவேண்டும்.

தமிழ் நாட்டில் அறிவொளி என்கின்ற இயக்கம் இயங்கிவருவது நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதன் செயற்பாடு வயது முதிர்ந்தவர்களுக்கு கிராமங்கள்,நகரங்கள், வீடுகள் தோறும் சென்று கல்வி அறிவு ஊட்டுவதே ஆகும் அதுபோலவே எமது சமூகத்தில் கணினி அறிவு வீட்டுக்கு வீடு நிச்சயமாக பரவவேண்டும். அனைத்து வீடுகளிலும் கணினி இணைக்கப்படுகின்ற அளவுக்கு எமது வாழ்க்கை நவீன மயப்படுத்தப்பட வேண்டும். வாழ்க்கை முறையில் மக்களின் சுமைகள் குறைக்கப்படவேண்டும். எங்களுடைய மக்களும் இலகு வழிகளில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் பாரிய உலகில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதேவேளை, கணினி உலகில் உள்ள தீமைகளை இனம்கண்டு ஒதுக்கி வலைப்பின்னல்களில் சென்று சிக்குண்டு வழி தெரியாது, தடம்தெரியாது போகின்ற நிலைகளை முற்றாகத் தடுத்து ஒரு பக்குவமான பாதையை, அதாவது நாம் விடுதலைப் பாதையை வகுத்துக் கொண்டது போல கணினி அறிவைப் பெறும் பாதையை ஆரம்ப அத்திவாரக் கற்களாகக் கொண்டு கணினி கற்கையினை ஐயம்திரிபின்றிக் கற்று கணினி உலகில் முன்னுக்கு வரவேண்டும் கணினி கற்பவர்கள் பலரை உருவாக்கவேண்டும் என்றார். (சோ.லோ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இலவச நடமாடும் பற்சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் பணிமனையின் ஒழுங்கமைப்பில் இலவச நட மாடும் பல் மருத்துவசேவை நடைபெறவுள்ளது.இதனடிப்படையில் இன்று காலை 9.30 மணிக்குகிளிநொச்சி கட்டம் 1 வைத்திய சாலையிலும், நாளை பளை வைத்தியசாலையிலும், 2ஆம் திகதி பூநகரி பிரதேச செயலகம் பூநகரியிலும், 3ஆம் திகதி தர்மபுரம் வைத்திய சாலையிலும் மேற்படி இலவச பல் மருத்துவ சேவை இடம்பெறவுள்ளதென கிளி.மாவட்ட பி.மா. சு.சே.பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (சோ.லோ)

## - உள்ளூராட்சி உப விதிகள் குறித்து -

# உள்ளூராட்சி ஊழியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

வட-கிழக்கு மாகாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நேற்றும் நேற்று முன்தினமும் கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவை மண்டபத்தில் நடைபெற்றது. வடகிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி விஜயலட்சுமி, உதவி ஆணையாளர் எஸ். நாகேஸ்வரன், வடகிழக்கு உள்ளூராட்சித்திணைக்கள உதவிப் பணிப்பாளர் பி.சிவானந்தா, வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.கந்தசாமி ஆகியோர் கலந்து உள்ளூராட்சி உபவிதிகள் , ஒழுங்கு முறைகள், சட்டமூலங்கள் குறித்து கருத்துரை வழங்கினர்.

கிளி. மாவட்ட' பிரதேச சபை ஊழியர்கள், சனசமூக நிலைய தலைவர்கள்,மேற்படி பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொணடமை குறிப்பிடத்தக்கது (சோ.லோ)

# அரசு - புலிகள் பேச்சுவார்த்தை முன்னேற்றம் கண்டு வருகின்றது

## - பிரித்தானியா கருத்து

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என பிரித்தானியா கருத்து வெளியிட்டுள்ளது.

அத்தோடு இலங்கையின் இந்த சமாதான நடவடிக்கையில் தாம் அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும் பிரித்தானியா கூறியுள்ளது.

பிரித்தானியாவின் வெளிநாட்டு மற்றும் பொதுநல விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மைக் கேபிறான் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசதரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான ஜீ எல்.பீரிசை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியதாகவும் தற்போதைய சமாதான நடவடிக்கையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது தாம் இருவரும் கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நோர்வே அரசு புலிகளுக்கு அதிக சலுகை வழங்குகிறது

## - சனாதிபதியின் ஆலோசகர் கதிர்காமர்

(கொழும்பு)

நோர்வே அரசு விடுதலைப் புலிகளுக்கு அதிக சலுகைகள் வழங்கி வருகிறது என சிறிலங்கா சனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் நலனில் நோர்வேக்கு எந்தவித அக்கறையும் கிடையாது எனவும் விசனம் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில் தன்னை முக்கிய பங்காளராக நிறுத்திக் கொள்ளவே நோர்வே அரசு முயன்று வருவதாகவும் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார்.


ஆரம்பம்

உத்தியோகத்தர்களுக்கான

SPOKEN ENGLISH WITH GRAMMAR

காலம் : 05-04-2003 (சனிக்கிழமை)

நேரம் : பி.ப. 4 மணி.

இடம் : கிறீன்வே அக்கடமி, கனகபுரம், கிளிநொச்சி.

சனி, ஞாயிறு இரு நாட்களும் நடைபெறும்

ஆசிரியர்

K. ஜெகராஜன்

2274


## - மாமரத்தில் வெடிக்கும் நிலையிலிருந்த -

# ஆர்.பி.ஜி.எறிகணை வெடிக்கவைக்கப்பட்டது

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி - புதுக்காடு வீதியில் மாசார் சந்தியில் அமைந்துள்ள வீட்டுக் காணியில் உள்ள மாமரம் ஒன்றினுள் வெடிக்கும் நிலையில் இருந்த ஆர்.பி.ஜி. எறிகணை ஒன்று நேற்றுக் காலை 11.20 மணிக்கு மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. இதனால் பெரும் ஆபத்து நீக்கப்பட்டுள்ளது. (11)

# கோணாவில் - கந்தபுரம் வீதி மரப்பாலம் பழுதடைந்தது

கோணாவில்- கந்தபுரம் இணைப்பு வீதிப்பாலம் பழுதடைந்துள்ளதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

சிலிப்பர் கட்டைகளினால் போடப்பட்டு கட்டையின் இரு மருங்கும் இரும்புக் கேடரினால் பொருத்தப்பட்டு போக்குவரத்தின் பாதுகாப்பாக செப்பனிடப்பட்டிருந்த மேற்படி பாலத்தின் ஒருபக்க கேடர் கழற்றப்பட்டுள்ளதன் காரணத்தினால் மேற்படி பாலம் பெரும் அபாயத்தினை விளைவிக்கக் கூடியதாக தற்போது அமைந்துள்ளது.

யூனியன் குளம் வீதி பழுதடைந்து பாவனைக்குட்படுத்த முடியாதநிலையில் உள்ளமையின் காரணமாக இப்பாலத்தினூடாகவே பாதசாரிகளும், போக்குவரத்து வாகனங்களும் தற்போது பயணத்தை மேற்கொண்டு வருகின்றன. கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு மக்கள் போக்குவரத்திற்கென அமைக்கப்பெற்ற பாலமே இது வென்பதுகுறிப்பிடத்தக்கது. (சோ)

# பயிர்ச்செய்கைக் கூட்டம்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் உடையார்கட்டு தெற்குக் குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச் செய்கைக்கான கூட்டம் எதிர்வரும் 2ஆம்திகதி உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.இக்கூட்டம் முல்லை மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெறும். ஆகவே இப்பகுதி விவசாயிகளை இக்கூட்டதத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு உ.தெற்கு கிராம அலுவலர் ஜெயதாஸ் கேட்டுள்ளார். (19)


M.S.F (H) மருத்துவ சேவை மாற்றம்

1996ஆம் ஆண்டு மல்லாவியில் ஆரம்பிக்கப்பட்ட M.S.F.(H) இன் மருத்துவ திட்டம் 31-03-2003 இன்று மூடப்படுகிறது. இம் மருத்துவ சேவையை செய்வதற்கு எமக்கு உதவிகள் புரிந்த மல்லாவி வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. M.S.F.(H) இன் மருத்துவ சேவை புதுக்குடியிருப்பில் தொடரும் என்பதனைத் தயவுசெய்து கருத்திற் கொள்ளவும்

(3056) நிர்வாகி

# அமெரிக்க இராணுவக் கட்டமைப்புக்குள் முரண்பாடு; அதிகாரிகளின் ஆலோசனைகளும் நிராகரிப்பு!

## களமுனைத் திருப்பங்களால் ஏற்பட்டுள்ள மாற்றம்


**ஈராக் போர் தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடிகளால் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சருக்கும் உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. களமுனை அதிகாரிகளின் வேண்டுகோள்களையும் ஆலோசனைகளையும் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ட்ரம்ஸ் பீல்ட் நிராகரித்துள்ளார்**

ஈராக் யுத்தத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளையடுத்து தரைவழி நகர்வுகள் ஒருவாரகாலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.


இந்நிலையில் ஈராக்கிற்கு மேலதிக துருப்புக்களையும், இராணுவத் தளபாடங்களையும் அனுப்பி வைக்குமாறு அமெரிக்க இராணுவ தலைமையக அதிகாரிகள் தெரிவித்துள்ள ஆலோசனைகளை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் நிராகரித்துள்ளார். இதற்கான இறுதித்தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் தமக்கே உள்ளதாக அமெரிக்க பாதுகாப்பமைச்சர் கருதுவதாக பென்டகன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இராணுவ உயர் அதிகாரிகளின் தீர்மானங்களை அமெரிக்க பாதுகாப்பமைச்சர் கவனத்தில் எடுக்கவில்லையென நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகையை மேற்கோள்காட்டி ராய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

துருக்கியூடாக ஈராக்கிற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து மாற்றுவழிகள் தொடர்பாக ஆராயும் வரை இராணுவ நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு அமெரிக்க கட்டளை அதிகாரி தெரிவித்த ஆலோசனையை அமெரிக்க பாதுகாப்பமைச்சர் அலட்சியப்படுத்தியுள்ளதாக அப்பத்திரிகை கூறுகிறது.



பாக்தாத் சந்தைப் பகுதியில் கொல்லப்பட்ட தனது மகனின் உடல் வைக்கப்பட்ட பெட்டிமுன் கதறியழும் தாய்



GBU-37 ரக பதுங்கு குழிகளைத்தாக்கும் 5000 இறாத்தல் எடையுள்ள குண்டொன்றை விமானத்தில் ஏற்றும் அமெரிக்க விமானப்படைவீரர்.

## புகைக்கத் தடை!

(வாஷிங்டன்)


நியூயோர்க்கில் இந்த வார இறுதியிலிருந்து புகைப்பிடித்தல் தடைசெய்யப்படுகின்றது. இங்குள்ள மதுபானச்சாலைகள் அனைத்திலும் புகைப்பிடித்தல் தடை செய்யப்படுவதாக மாநில நிர்வாகம் அறிவித்துள்ளது.

கலிபோனியாவில் புகைப்பிடித்தலுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஏறகனவே அமெரிக்காவில் பல சிறிய நகரங்களிலும், பட்டணங்களிலும் புகைப்பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கிய யுத்தத்தில் முதலாவதாக பலியான பத்து பிரிட்டிஷ் படை வீரர்களின் உறவினர்கள் ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லும் காட்சி




உம்காஸர் துறைமுகத்துக்கு 650 தொன் உடனடி உதவிப் பொருட்களுடன் வந்துள்ள பிரிட்டிஷ் கப்பல்

### வழிதவறிய 'ரொமகொக்'

அமெரிக்கக் கப்பல்களிலிருந்து பாரசீகக்குடா மீது ஏவிய ரொமகொக் ஏவுகணைகளில் நான்கு சவூதி அரேபியாவில் வீழ்ந்து வெடித்துள்ளன.

ஈராக் நோக்கிச் செலுத்தப்பட்ட ஏவுகணைகளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளே இதற்குக் காரணம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



பஸ்ராவுக்குத் தெற்கே வெடிப்புக்குள்ளாகியுள்ள எரிபொருள் குழாய் ஒன்று

## பாகிஸ்தானிய பயங்கரவாதத்திற்கு முடிவில்லையேல் சர்வதேச நடவடிக்கைகள் வெற்றி தராது!

### - இந்திய வெளியுறவு அமைச்சர் கருத்து

பாகிஸ்தானில் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடிவிற்கு கொண்டுவராதவரை சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை வெற்றிபெறாது என வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங்ஹா கூறியுள்ளார்.

பி.பி.ஸிக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், பயங்கரவாதத்தின் ஊடுருவலை உடனடியாக நிறுத்த வேண்டும் என அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டாக அறிக்கை மூலம் பாகிஸ்தானை கேட்டுள்ளதை தாம் வரவேற்பதாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சு நடத்த வேண்டும் என அவர்கள் கூறியுள்ளமை ஒசாமா பின்லேடனுடனும், சதாம் ஹுசைனுடனும் அமெரிக்கா பேச்சு நடத்தவேண்டும் என்று கூறுவதைப் போன்றதாகும் என அவர் கூறியுள்ளார்.

## விமான தாக்குதலுக்குப் பதிலடி; இரு அமெரிக்க படையினர் பலி!

அமெரிக்க விசேட படைப்பிரிவு ஆப்கானிஸ்தானில் தாக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் இரண்டு அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

இராணுவத்தினர் பயணித்த இராணுவ வாகனங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர். ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட 04 வாகனங்கள் ஆப்கானிஸ்தானின் ஹெல்மன் மாகாணத்தில் தென்நகர் ஒன்றில் வைத்து தாக்கப்பட்டது. தென் ஆப்கானிஸ்தானில் இனம் காணப்பட்ட சில பிரதேசங்களை அமெரிக்காவின் B-52 குண்டுவீச்சு விமானங்கள் தாக்கியதையடுத்து பதில் தாக்குதலை தாம் நடத்தியதாக தலிபான் அமைப்பினர் கூறியுள்ளனர்.



ஈராக்கிய யுத்தக் கைதியை கூட்டிச்செல்லும் பிரிட்டிஷ் படைவீரர் ஒருவர்

# பிஞ்சுகளை புடம்போடும் அறிவுச்சோலை

ஜெயக்குமார்

**1991 ஆம்** ஆண்டு எனக்கு வயது ஒன்பது. ஒரு நாள் நான் எனது வீட்டின் அருகில் உள்ள மைதானத்தில் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தேன்.

திடீரென வானவெளியில் உலங்கு வானூர்திகளின் சத்தம் கேட்டது. வானூர்திகள் எல்லாம் கிட்ட இறங்கிவிட்டன. எனக்கு பயத்தினால் கால்கள் அசையவில்லை. ஓடமுடியாமல் சுற்றும் முற்றும் பார்த்தேன். எனது நண்பர்கள் எல்லோரும் ஓடிவிட்டனர்.

சிறிலங்கா இராணுவம் எனது கைகள் இரண்டையும் இறுகப் பற்றியது. நான் பெரும் குரலில் அப்பா, அம்மா என்று கத்தினேன். எனக்கு பயத்தினால் உடல் எல்லாம் நடுங்கியது.

என்னுடைய சத்தம்கேட்டு என்னுடைய அன்பான அப்பாவும், பாசமுள்ள அம்மாவும் மைதானத்திற்கு ஓடிவந்தார்கள்.

உடனே இராணுவ கூலிச் சிப்பாய்கள் எனது அப்பாவின் கைகளையும், கண்களையும் கட்டினர். பின்னால் ஓடிவந்த அம்மாவின் கண்களும் கட்டப்பட்டன.

என்னுடைய அப்பா ஏற்கனவே நோயாளி. அவர் பயத்தினால் இன்னும் பலவீனமடைந்த நிலையில் காணப்பட்டார்.

இராணுவச் சிப்பாய் ஒருவன் பாய்ந்து சென்று துப்பாக்கிப் பிடியால் அப்பாவை அடித்து விட்டு "எங்கையடா கொட்டியா?" என்று அதட்டிக் கேட்டான்.

"எனக்கு தெரியாது" என்று அப்பா சொன்னார்.

திரும்பவும் அடித்தான். அடித்துவிட்டு துப்பாக்கியால் அப்பாவை நோக்கி சுட்டான். அப்பா நிலத்தில் வீழ்ந்து அரை உயிரில் துடித்துக்கொண்டிருந்தார்.

அம்மா பெருஞ்சத்தமெடுத்து தன்நிலை மறந்து அழுதார்.

அந்த மைதானத்தை சுற்றி காடு இருந்தது. "ஓடித் தப்பு" என்று சொல்லி அம்மா என்னை பிடித்துத் தள்ளிவிட்டார்.

நான் காட்டுக்குள்ளால் அம்மம்மாவிட்... வீட்டை நோக்கி ஓடினேன். அம்மம்மா என்னிடம் "அம்மா எங்கே?" என்று கேட்டார். நான் அவர்கள் முன் விக்கி, விக்கி அழுதேன். நடந்தவற்றை அவர்களுக்குச் சொன்னேன்.

ஆனால், அம்மாவும் திரும்பி வரவில்லை. அடுத்த நாள் அம்மாவினதும், அப்பாவினதும் உயிரற்ற உடல்கள் மைதானப்பகுதியில் கிடப்பதாக அறிந்தோம்.

அங்கு இராணுவம் தொடர்ந்தும் இருந்ததால் எங்களால் அங்குபோக முடியவில்லை. அம்மாவினதும் அப்பாவினதும் இறந்த உடல்களை பார்க்க முடியவில்லை.


இதனை நினைத்துப்பார்க்கும்போது எனது நெஞ்சே வெடித்துவிடும் போலிருக்கும்.

நான் இப்போது அறிவுச்சோலையில் சேர்ந்து மிக மகிழ்ச்சியாக இருக்கின்றேன். ஆனாலும், என்னுடைய துள்ளித்திரியும் பருவத்தின் போது எனது சிறகுகளை உடைத்த சிறிலங்கா ஆமியின் கொடுமையை என்னால் மறக்க முடியாதுள்ளது.

இது காந்தரூபன் அறிவுச் சோலையிலுள்ள பு.அன்ரனி தெரிவித்த மனதை நெருடி விட்ட கதை.

ஆம்! இதுபோன்ற பல அன்ரனிகள் இன்று அந்தப் பூங்காவில் துள்ளித்திரிவதைக் காணமுடிகின்றது.





□ □ □

மாலை நான்கு மணி. நாம் காந்தரூபன் அறிவுச்சோலைக்குள் நுழைந்தோம். அது ஒரு கிராமம்போல எமக்கு காட்சியளித்தது. நடுவில் பெரிய விளையாட்டு மைதானமும் அதன் அருகில் தென்னந்தோட்டங்களும், மாஞ்சோலைகளும், இயற்கை வனங்களும் என அந்த இடம் அழகாகவே காட்சி தந்தது. நிறைய வீடுகளும், கட்டடங்களும் தெரிந்தன.

அழகாக அமைக்கப்பட்டிருந்த வரவேற்பிடம். அதனைச் சுற்றி பூந்தோட்டம் வரவேற்பிடத்தில் அழகான மீன் தொட்டி அதில் மீன்கள் துள்ளித்திரிந்து குதூகலித்தன.

பூந்தோட்டத்தின் ஒருபுறம் முயற் கூட்டில் முயல்களும் இன்னொரு புறத்தில் புறாக்களும் இருந்தன.

சிறுவன் ஒருவர் முயலுக்கு இலை வெட்டி போட்டுக்கொண்டிருந்ததுடன் பூந்தோட்டத்திலும் ஏதோ பணியில் இருந்தார்.

எங்கு திரும்பினாலும் சிறுவர்கள் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தனர்.

நேரம் 4.30 மணி அங்கிருந்த ஒலி பெருக்கி இயங்கியது. தமிழீழ வானொலி செய்தி ஒலிபரப்பாகியது.

அப்போது ஐந்து வயது மதிக்கத்தக்க இரண்டு சிறுவர்கள் தோள்மீது கைபோட்ட படி சந்தோசமாகத் துள்ளித் துள்ளி ஓடிக் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் கூப்பிட்டோம். திரும்பி எங்களிடம் ஓடிவந்து "வணக்கம் மாமா" என்றார்கள்.

நாங்கள் பதிலுக்கு வணக்கம் என்றோம்.

"நீங்கள் எங்கே போறீங்கள்" கேட்டோம்.

"வீட்டுக்குப் போறம் மாமா" என்றார்கள்.

"எங்கிருந்து போறீங்கள்" நாங்கள் அவர்களின் கையைப் பிடித்துக்கொண்டு கேட்டோம்.

"பள்ளிக்கூடத்தில் இருந்து"

"என்ன வகுப்பு படிக்கிறீங்கள்?"

"முதலாம் ஆண்டு"

"என்ன சாப்பிட்டீங்கள்?"

"சோறு. மீன்கறி, முட்டை, கீரை, மீன் சொதி"

"நீங்கள் போட்டு வாங்கோ" என்றோம்.

'நன்றி மாமா' என்று கூறிவிட்டு ஒருவர் தன்னுடைய செருப்பை மாட்டிக்கொண்டு மற்றவருடைய செருப்பை எடுத்து அவர் காலுக்கு நேராக வைத்து போட்டுக் கொண்டு மீண்டும் தோளில் கையை போட்டுக் கொண்டு துள்ளித்துள்ளி தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.

இங்கு விடுதி, ரூம் என்ற சொற்கள் தெரியாது. அவர்கள் இருக்கும் இடத்தினை அவர்கள் வீடு என்றுதான் குறிப்பிடுகின்றார்கள்.

"அவர்கள் இருக்கும் வீட்டில் அம்மா, அப்பா இல்லையே தவிர அங்கு அன்பிற்கும், பாசத்திற்கும் பஞ்சமில்லை" என்கின்றார். இவர்களைத் தாய் போல் கவனித்து வரும் புனிதம் அம்மா என்பவர்.

"வெளியில் உள்ள பிள்ளைகளை விட இவர்கள் சகல வசதிகளுடன், மிகவும் சந்தோசமாகக் கல்விகற்று வருகின்றனர். இவர்களை யாரும் குற்றம் சொன்னால் என் மனம் தாங்கிக்கொள்ளாது" என்று ஒரு தாய்ப்பாச உணர்வுடன் அவர் கூறுகின்றார்.

இவர்களுக்கென தொலைபேசி பயன்பாட்டு வசதி, கணினி வசதி, தொலைக் காட்சி வசதி, நூலகம், ஆய்வு கூடம், விளை யாட்டு எனச் சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களின் மருத்துவத் திற்கென மருத்துவப் போராளி ஒருவரும், மருத்துவ விடுதியும் இருக்கின்றன.

1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.

பல இடப்பெயர்வுகளைச் சந்தித்த நெருக்கடியான நிலையிலும் தனது பணியில் இந்த அறிவுச் சோலை தொடர்ந்தும் ஈடுபட்டது. 35 நாளினை உடைய ஆண்குழந்தை உட்பட 220 சிறுவர்களை தன் மடியில் தாங்கி அவர்களுக்கு வளமான எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்க அறிவுச் சோலை அரும்பாடுபடுகின்றது.

எமது விடுதலைப்போரில் காவியமான ஒரு கரும்புலியின் இறுதி ஆசையை ஈடேற்றும் வகையில் உருவான இந்த அறிவுச் சோலை, இன்று அந்த சிறுவர்களின் பூஞ்சோலையாகக் காட்சிதருகின்றது.

"முழுமையான மனிதர்களை உருவாக்கும் புதுமையான பரிசோதனைக் களமாக காந்தரூபன் அறிவுச்சோலை அமைய வேண்டும் என்பது எனது ஆவல். இளமையில் இருந்துதான் முழுமையை வளர்க்க முடியும். முழுமை எனும்பொழுது அறிவும், ஆற்றலும், அறநெறிப் பண்புகளும் கொண்ட நிறைவான மனித வளர்ச்சியையே குறிப்பிடுகின்றேன். வல்லவர்கள் நல்லவர்களாக, நேர்மைத்திறன் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படியான சிறந்த மனிதர்களை முழு மனிதர்களாக உருவாக்குவதே அறிவுச் சோலையின் இலட்சியமாக அமைய வேண்டும்" என்ற தேசியத் தலைவரின் எண்ணத்தினை அறிவுச் சோலை அடைந்து நிற்கின்றது.

அவர்களின் கல்வி வளர்ச்சியும், ஏனைய செயற்பாடுகளும் இதற்கு சான்று பகர்ந்து நிற்கின்றன. □

---

## உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு முகாமைத்துவ வலுவூட்டற்செயற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் தாயகப் பிரதேசங்களை உள்ளடக்கிய எட்டு மாவட்டங்களிலும் இயங்கிவரும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டுக்கான முகாமைத்துவ வலுப்படுத்தற்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் புனிசெவ் நிறுவன அனுசரணையுடன் கடந்தவாரம்தொடங்கப்பட்ட இந்தப் பயிற்சிநெறி தொடர்ந்து 40 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கான துறை சார்ந்த வல்லுனர்களால் திட்டமிடப்பட்ட செயல்முறை விளக்கங்களுடன் கூடிய பயிற்சிகள் வழங்கப்படுகிறது. திட்டமிட்டவாறு சிறப்பாகப் பயிற்சி நெறியை நடாத்தி முடிப்பதன் மூலம் எதிர்காலத்தில் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நிறுவனம் சார்ந்த வேலைத்திட்டங்களின் முன்னெடுப்புக்களுக்கு தகுதியான வல்லுனர்களை உருவாக்க முடியும் என தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

மேற்படி முகாமைத்துவ வலுப்படுத்தல் பயிற்சி நெறி முல்லைத்தீவு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய கேட்போர்கூடத்தில் நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே. (அ)

---

## தமிழ் புத்தாண்டுத் தினத்தில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி!

(ஒட்டுசுட்டான்)

எதிர்வரும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளது.


முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து இதனை நடாத்தவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதேச செயலகங்களில் தங்கள் பெயர்களை எதிர்வரும் 05-04-2003ற்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பு கேட்டுக்கொள்கிறது. (05)

# வாழ்வு வளம்பெற... வாசிப்போம்!



நம்மில் அனேகமானவர்கள் பொழுது போகவில்லை என்பதற்காகப் புத்தகங்களை வாசிக்கின்றோம். புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொண்டால் நாம் எதை உறுதியாகத் தேடிக்கொண்டிருக்கிறோமோ அதைத் தேடிக் கண்டுபிடிக்க



இப்பழக்கம் வழிகாண்பிப்பதோடு அதன் ஊடாக எமக்குத் தெரியாத பல்வேறு விடயங்களையும் அறிந்துகொள்வதுடன் பயனுடையதாக்வும் அமைந்துவிடும்.

"கண்டதையும் கற்றவன் பண்டிதனாவான்." எனும் பழமொழிக்கேற்ப நாம் எமக்குக் கிடைக்கின்ற புத்தகங்களை ஓய்வு நேரத்தில் படிக்கவேண்டும். "பாலையும் தண்ணீரையும் கலந்து வைக்கும் போது, தண்ணீரைவிட்டு பாலை உண்ணும் குருகு (அன்னம்) போல". நாமும் புத்தகங்களில் தீயன வற்றை விலக்கிவிட வேண்டும். அத்துடன் மனிதனைப் பூரண மனிதனாக்குபவையில் வாசித்தலும் அடங்கும். ஏனெனில் எல்லோருக்கும் எல்லாம் தெரியும் என்றில்லை. வாசிக்க வாசிக்க அறிவு அதிகரிக்கும். அறிவு அதிகரிக்க அதிகரிக்க எழுதும் ஆற்றல் தானாக ஊற்றெடுக்கும். அந்த ஊற்றின் வெளிப்பாடாக கட்டுரை, சிறுகதை, கவிதை, நாவல் எனப் பல்வேறு ஆக்கங்களை எழுதக்கூடிய ஆற்றல் உருவாகும். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.' என்பதற்கேற்ப இயன்றவரை நேரத்தை ஒதுக்கி நூலகத்திலோ அல்லது புத்தகங்களை வீட்டில் எடுத்துக் கொண்டு சென்றோ படிக்க வேண்டும். நாம் இயன்றவரை நல்ல புத்தகங்களையே படிக்க வேண்டும். ஏனெனில் நல்ல புத்தகம் நல்ல இரத்தம் போன்றது. நல்ல இரத்தமானது அரோக்கியமான உடலைப் பாதுகாப்பது போல் நல்ல புத்தகங்கள் மதிப்புமிக்க வாழ்க்கையை உருவாக்கித்தருகின்றது.

நமது உயிரைப்போல இன்னொரு உள்ளுயிராக, ஆற்றல்மிகு மருந்தாக சிறந்த புத்தகம் உடனிருந்து உதவும்.

நம்முடைய வாழ்க்கைக் குறிக்கோளை மறக்காமலிருந்து நினைவுபடுத்திக்கொள்ள சிறந்த புத்தகங்களை அடிக்கடி படிக்க வேண்டும். நாம் மேம்பட்ட வாழ்க்கையை அடைகின்றோமோ, இல்லையோ அதை அடைவதற்கு ஏற்ற மனிதனாக எம்மைத் தட்டித்தட்டி உருவாக்குபவை புத்தகங்கள் என்பதில் சந்தேகமில்லை. எனவே புத்தகங்கள் படிக்க நேரமொதுக்குங்கள். எந்தவொரு புத்தகமும் ஒருவரின் ஆன்மா. அதனால் தான் புத்தகம் படிக்கும் பழக்கத்தால் பலர் வாழ்க்கைப்பந்தயத்தில் வெற்றியடைந்துள்ளார்கள்.

புத்தகங்கள் அனைத்தும் வெறும் அச்சடிக்கப்பட்ட எழுத்துக்கள் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. ஒவ்வொன்றும் வாழ்க்கையைப் பயனுள்ளபடி வாழ ஆற்றல் தரும் எண்ணக்கருத்துக்களின் கருவூலங்களாகும்.

தமது ஆன்மா எவ்வளவு செயலாற்றலுடன் இருந்து சாதித்துள்ளது என்பதை பின்வரும் சந்ததியினரும் அறிந்து கொள்ளவும், அவற்றின்படி ஒழுகவும், அவற்றை ஏடுகளில், நூல்களில் ஆன்றோர் எழுதிவைத்தனர்.

உதாரணமாக திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் 1330 குறட்பாக்களாக இருந்து எமக்கு எவ்வளவிற்கு பயன்தருகின்றது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இரண்டு அடிக்குள் எவ்வளவு ஆழமான கருத்துக்கள் அதில் பொதிந்துள்ளன. அவை ஓர் உயர்வான மனிதனை உருவாக்குகின்றன.

பல்வேறு விடயங்களைத் தேடி வாசிக்கும் போது அவை பூரணமான வெற்றியை எமக்களிக்கின்றது. இன்றைய நவீனயுகத்திலே மாணவர்களின் பால் புகுத்தப்பட்டுள்ள புதிய கல்வித்திட்டமானது ஒரு தேடல் ஆகும். தேடி வாசிப்பதனால்தான் அவர்கள் ஒப்படை கணிப்பீடு என்பனவற்றுக்குத் தயாராகின் றார்கள்.

எனவே தேடி வாசித்தல் என்பது கல்வியை வளப்படுத்துகின்றது. கல்வி என்னும் பயிருக்கு வாசித்தல் நீராக இருந்து செழிக்க உதவுகின்றது.

நாம் ஒரு துறையில் பிரகாசிக்க வேண்டுமாயின், அத்துறை பற்றிய விடயங்களை முதலில் வாசிக்க வேண்டும். வாசிப்பதனால் மனதில் அவ்விடயங்கள் ஆழப்பதிந்து, எமது சிந்தனையாற்றலை வளப்படுத்தி, எம்மை அத்துறையில் மிளிரச்செய்யும்.

எனவே, வாசித்தல் என்பது எம்மைப் பாதுகாப்புடனும், கண்ணியத்துடனும் வாழவைக்கும். இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் ஓரளவிற்கு வாசிப்பதனால் நாம் அறிந்துகொள்ள முடியும்.

எனவே வாசித்தல் என்பது நல்ல அறிவுக்காக. அறிவு என்பது ஒழுக்கத்திற்காக, ஒழுக்கம் என்பது நல்வாழ்வுக்காக. நாமும் வாசிப்போம், தேடிக்கற்போம்.

த.ரேணுகா

## வீரவணக்கக் கூட்டமும் நடுகல் திரைநீக்கமும்

(மல்லாவி)

கடந்த 01.02.1998ம் ஆண்டு கிளிநொச்சி ஆனையிறவு பரந்தன் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருடனான மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை - செஞ்சோழன் (ஜெயசங்கர்-ஜெயசீலன், 2ம் யுனிற், பாலிநகர், வவுனிக்குளம்) என்னும் மாவீரரின் திருவுருவப்படம் நினைவுக்கல் திரைநீக்கம் செய்வதற்காக பாலிநகர் மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளியன்று காலை 11.30 மணிக்கு வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

நிகழ்வின் பொதுச்சுடரை, பாண்டியன்குளம் பிரதேசப் பொறுப்பாளர் கலைவாணனும் ஈகச்சுடரை வீரவேங்கை செஞ்சோழனின் தயாரும் ஏற்றிவைத்தனர். மலர் மாலையினை, மாவீரரின் பேத்தியார் அணிவித்தார். தொடர்ந்து வீரவணக்க நிகழ்வு இடம்பெற்றது. துணு/பாண்டியன் குளம் பிரதேச மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் க.பாரதிராஜ் தலைமையில் அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டது. தலைமையுரையினைத் தொடர்ந்து, வீரவணக்க உரையினை பாலிநகர் மகாவித்தியாலய ஆசிரியர் சு.கேதீஸ்வரன், ஒட்டங்குளம் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அ.நனிநாயகம், துணுக்காய் பிரதேசப் பொறுப்பாளர் த.தர்மேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். மற்றும் பாலிநகர் மகாவித்தியாலய மாணவி செல்வி. ஜெனனியின் கவிதையும் இடம்பெற்றது. மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. இதில் பாலிநகர் மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், தேசிய எ. பேரவை உறுப்பினர்கள், ப. நோ. கூ. சங்க பிரதிநிதிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இறுதியாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூரண இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது. (07)

## புலமைப்பரிசில் நிதியுதவி

(முள்ளியவளை)

கல்வி கலாச்சார மனிதவள அமைச்சின் 2001 ஆம் ஆண்டுக்கான 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நடைபெற்ற பரீட்சையிலும் ஏனைய பாடவிதானங்களிலும் சித்தியடைந்த மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி வித்தியாலயத்தைச் சேர்ந்த மி.றெனசி, க.தமிழினி, க.றதீஸ்கண்ணா, செ.சோபிகா, க.மேனகா, த.சாலினி,வி.டயானா, பு.கார்த்திகா ஆகிய எட்டு மாணவிகளுக்குமான புலமைப்பரிசிலாக தலா 500 ரூபாவீதம் கிடைத்துள்ளது என மு/கலைமகள் வித்தியாலய அதிபர் மு. உதயசங்கர் தெரிவித்தார். (ஆ)

## மாணவர் வரவு குறைவால் மூடப்படும் பாடசாலைகள் குறித்து பரிசீலிக்க முடிவு

(கொழும்பு)

மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவுள்ள பாடசாலைகளை மூடிவிடும் சுற்று நிருபத்தை உடனடியாக இடைநிறுத்துமாறும் மூடப்பட்டுள்ள 500 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் பற்றி ஆய்வு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் மனிதவள அபிவிருத்தி கல்வி கலாச்சார அமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு உத்தரவிட்டுள்ளளார்.

அமைச்சின் செயலாளருக்கு அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பதோடு, இதுபற்றி சகல மாகாணக் கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

கடந்த 06 வருடங்களில் கல்வி அமைச்சின் சுற்று நிருபம் ஒன்றின் அடிப்படையில் மாணவர்களின் எண்ணிக்கை 115இற்கு குறைவாக உள்ள பாடசாலைகளை மூடி விடும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி நாடெங்கிலும் 565 பாடசாலையளவில் மூடப்பட் டுள்ளன. மேல் மாகாணத்தில் மாத்திரம் இவ்வாறு மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 215 ஆகும்.

கடந்த ஆறு வருடங்களில் இவ்வாறு மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது. மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் விபரப்பட்டியலைச் சமர்ப்பிக்குமாறு கல்விப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதனால், மூடப்பட்டுள்ள பாடசாலைகள் தொடர்பாகப் பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் ஏப்ரல் மாதம் மாகாண மற்றும் மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவும், தேவைப்படும் பாடசாலைகளை மீண்டும் திறக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.



தூயவன் அரசறிவியற் கல்லூரியில் கடந்த இரு நாட்கள் நடைபெற்ற இணையத்தளம், மென்பொருளாக்கம் தொடர்பான கணினிப் பயிற்சியின்போது.... (சோ,லோ)

## நாச்சிக்குடா கடற்கரையில் தங்கு மண்டபம் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி நாச்சிக்குடா கடற்கரைப் பகுதியில் புதிதாக தங்கு மண்டபம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப் படவுள்ளது.

மேற்படிப் பகுதியில் வசிக்கும் முஸ்லிம் மக்களின் நன்மைகருதியே இத் தங்கு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 02ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பூநகரி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் புதிதாக இத்தங்கு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,லோ)

# கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு இருநாள் வீதி ஒழுங்கமைப்பு செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

**யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி/வலய கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு வீதிப் பாதுகாப்பு ஒழுங்கமைப்பு செயலமர்வு கிளி. மத்திய கல்லூரியில் ஆரம்பமாகி நேற்றும் இடம்பெற்றது.**

கிளி.வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ம.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை யுனிசெவ் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தமிழீழ தேசியக்கொடியினை ஏற்றிவைத்தார். கிளிநொச்சி தலைமைக்காவலர் இ. மனோகரன், கிளி. கல்வி வலய கருத்துரைகளை வழங்கினர்.

அத்துடன், மத்திய கல்லூரி மைதானத்தில் கனரக வாக னங்கள் மற்றும் சிறுவாகனங்கள் மூலம் செய்முறைகள் இடம் பெற்



மல்லாவி வதிவிடப் பிரதிநிதி பெனி புருன், தமிழீழ வாகன போக்கு வரத்து பிரிவு மேற்பார்வையாளர் கு. கனகலிங்கம் ஏற்றிவைக்க தமிழீழ கல்விக் முறைசாராக் கல்விப் பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. சின்னத்துரை, தொழில்நுட்ப போதனாசிரியர் எம். பிரசாத் ஆகியோர் கலந்து வீதி ஒழுங்குக் றன. பத்துப் பாடசாலைகளைச் சேர்ந்த 106 மாணவ, மாணவிகள் இச்செயலமர்வில் கலந்துகொண்டதுடன் நேற்றும் மேற்படி செயலமர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ.லோ)

## வாகன உரிமையாளர்களுக்கு!

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்துவாகன உரிமையாளர்களும் எதிர்வரும் 05-04-2003 இற்கு முன் உடையில் தங்களது கிராம அலுவலர்களிடம் வாகனங்களைப் பதிவுசெய்யுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# ஆசிரியர் போராட்டத்தால் மோசமடையும் மாணவர் கல்வி!

(ஒட்டுசுட்டான்)

தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம்கோரி பாடசாலைக்கு வராமையினால் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் 200ற்கும் மேற்பட்டோர் பாதிப் படைந்துள்ளனர் என மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அதிபர் பொ. அருமைச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; ஆசிரியர் பற்றாக்குறையினை இத்தொண்டர் ஆசிரியர்களே நிவர்த்திசெய்து வருகின்றனர் தற்போது இவர்கள் நிரந்தர நியமனம் கோரி பாடசாலை வராமையினால் இப்பாடசாலை மாணவர்கள் மட்டுமல்ல ஏனைய பாடசாலை மாணவர்களும் பாதிப் படைவார்கள். இதனால் மாணவர்களின் கல்விநிலை கேள்விக் குறியாகிவிடும் எனவும் தெரிவித்துள்ளார். (05)

# உள்ளூராட்சி செயற்பாடுகள் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

உள்ளூராட்சி செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் கிளி. மாவட்ட நிர்வாக சேவைப் பணிமனையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகியது.

கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் து. விஜயலட்சுமி ஏற்றிவைக்க, தமிழீழ நிர்வாக சேவை நடுவப்பணியகப் பொறுப்பாளர் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்.

அதனையடுத்து உள்ளூராட்சி செயற்பாடு தொடர்பான பயிற்சி வகுப்பு ஆரம்பமானது.

பிரதேசசபை பணியாளர்கள், சனசமூக நிலையத் தலைவர்கள், சனசமூக நிலைய உத்தியோகத்தர்கள் பெருமளவில் மேற்படி வகுப்பில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ.லோ)

# மானிப்பாயில் பாதுகாப்பு அதிகரிப்பு; பயிற்சி நடவடிக்கையும் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் பகுதியில் சிறிலங்கா படையினரும், பொலிசாரும் தமது பாதுகாப்பை அதிகரித்துள்ளதுடன் பயிற்சி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மானிப்பாய் இராணுவ முகாம் மற்றும் பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள பகுதியில் புதிய காவல் அரண்கள் அமைக்கப்பட்டு படைத்தரப்பு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பகுதியில் இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் காலை மாலை என்ற வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (23)

## உணவு நிவாரணம் வழங்கல்

(உடையார்கட்டு)

இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவுக் கொடுப்பனவிற்கான உணவு முத்திரை புதுக்குடியிருப்பு பிரதேசச் செயலர் பிரிவில் சித்திரை மாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங் கப்படும்.

இது இப் பிரதேச செயலர் பிரிவின் அனைத்துக்கிராம அலுவலர் பிரிவிலும் நடைமுறைக்கு வரும் என உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் தெரிவிக்கின்றார்.

## மக்களின் குடியிருப்புக்களிலுள்ள பாதுகாப்பு வலயங்களை அகற்றுக ரெலோ முதல்வர் கோரிக்கை

மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து படையினரின் உயர்பாதுகாப்பு வலயங்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும் என ரெலோ அமைப்பின் முதல்வர் சிறிகாந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மக்கள் குடியிருப்பு பகுதியில் மேலதிகமாகப் படை முகாம்களை அமைக்கக் கூடாது எனவும் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு ஆராயும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக எதிர்வரும் 7ஆம் திகதி யாழ். மாவட்ட படைத் தளபதியும், மனிதஉரிமை ஆணைக்குழுத் தலைவரும் சந்தித்து கலந்துரையாடும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட படைத்தளபதி சரத் பொன்சேகா, மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரிடம் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக படைத்தரப்பு எடுத்துக்கொண்ட பிரதேசங்களின் விபரங்கள் அடங்கிய பட்டியலை வழங்கவுள்ளார். (23)

## தாமதமின்றி மாணவர் சீருடை முத்திரைகளைப் பெறுக!

(உடையார்கட்டு)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச சீருடைக்கான முத்திரை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கிராம அலுவலர்களினால் விநியோகப் படுகிறது.

முத்திரையை கிராம அலுவலரிடம் பெற்றோர் பெற்று புதுக்குடியிருப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சீருடைப்பொதியை பெறலாமென உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் ஜெயதாஸ் தெரிவித்துள்ளார். (19)

## வவுனியா வடக்குப் பிரதேச திட்டங்கள் குறித்து ஆராய்வு

வவுனியா வடக்கு பிரதேசத்தில் உள்ள கனகராயன்குளம், நைனாமடு,சேமமடு வலயங்களில் உள்ள கிராம மட்ட அமைப்பு பிரதி நிதிகளுக்கும், நிறுவனங்களின் இணைப்பாளர்களுக்குமான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா வடக்கு பிரதேசப் பொறுப்பாளர் பிலிப் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சமகால அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், சிரான் வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கருத்துரை வழங்கினார்.


## பணிநிலை வெற்றிடங்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆளுகையின் கீழுள்ள ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவையாகவுள்ளனர். தகைமையுடையவர்கள் சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகைதரவும்.

நேர்காணல் நடைபெறும் இடம்: நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி.

காலம் : 12.04.2003 மு.ப 10.00 மணி

பணிநிலை - 1 : ஆய அலுவலர் (ஆண்கள்)

பணிநிலை - 2 : ஆய உதவியாளர் (ஆண்கள்)

தகைமைகள் : பணிநிலை 1இற்கு க.பொ.த (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை 2 இற்கு க.பொ.த (சா/த) கற்றிருத்தல் வேண்டும்.

**ஆயப்பகுதி,**
**நிதித்துறை.**
**த.வி.பு.**

(3045)



## ஜினாவின் நீங்காத நினைவுகள்

மலர்வு 29 06 1975

உதிர்வு 01 11 2001



**கோமுகி - ராதன்**

(ஆசிரியை - கொக்கிளாய் அ.த.க. பாடசாலை)

சொந்தம் சொல்லி வந்தவளே
சோகம் தந்து சென்றது ஏன்?

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

(2812)

உனது நினைவுகளுடன்,
**பாசஉறவுகள்**



**சிந்தனைக்கு**

போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 31-03-2003

## யதார்த்தத்திற்குப் பொருந்தாதது!

வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து அரச செயலகங்களிலும் கடமை நாட்களில் சிங்கக்கொடி ஏற்ற வேண்டும் என்ற உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பணிப்பானது, இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாக மட்டுமல்ல வடக்கு - கிழக்கு அரசியல் யதார்த்தத்திற்கும் மாறானதும், அடாவடித்தனமானதும் ஆகும்.

சிறிலங்காவின் தேசியக் கொடிக்கு - சிங்கக்கொடிக்கு - தமிழ் மக்கள் என்றுமே மரியாதை செலுத்தியது கிடையாது. அதனை ஓர் அடக்குமுறையின் சின்னமாகவே நோக்குகின்றனர். தமிழ் மக்கள் சிங்கள அரசுகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தபோது இச்சிங்கக் கொடியினை தமிழ் மக்கள் வெறுப்புடனேயே பார்த்து வந்துள்ளனர்.

அதாவது, தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் சிறிலங்கா அரசிற்கு எதிரான நடவடிக்கைகளில் சிங்கக் கொடியினை எரித்தல், புறக்கணித்தல் என்பன முக்கியமானதொரு எதிர்ப்பு நடவடிக்கையாக இருந்து வந்துள்ளன. இந்நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சிங்கக் கொடியினை ஏற்றுவதென்பது சிங்கள ஆட்சியாளர்கள் தமது சிந்தனைப் போக்கை மாற்றிக் கொள்ள இன்னமும் தயாராகவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாயுள்ளது.

சுமார் இருபது ஆண்டுகள் நீடித்த யுத்தத்திற்குப் பின்னர் கடந்த ஒரு வருட காலமாக வடக்கு - கிழக்கில் அமைதி நிலவி வருகின்றது. அதாவது, யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளதோடு, சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

இச்சமாதான முயற்சிகளில் முன்னேற்றமானது, இருதரப்பின் இடையேயும் வளர்த்தெடுக்கப்படும் நம்பிக்கைகள். அதாவது, கடந்த காலத்தில் இரு தரப்பினர் இடையேயும் காணப்பட்ட அவநம்பிக்கைகள், சந்தேகங்கள் என்பன நீக்கப்படும் பட்சத்திலேயே இச்சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. வேறுவிதமாகக் கூறுவதானால், கடந்த காலத்தில் தமிழ் மக்களிடம் இருந்து பறித்தெடுத்த உரிமைகளை மீளவும் வழங்குதல், சந்தேகங்களைப் போக்குதல் போன்றவற்றில் சிங்கள ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

இந்த வகையில், தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்கள், தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழியின் அமுலாக்கம், பல்கலைக்கழகங்களுக்குத் திறமையின் அடிப்படையிலான அனுமதி, வேலை வாய்ப்பில் சமத்துவம் போன்ற பல்வேறு விடயங்களில் சிங்கள ஆட்சியாளர்கள் நடுநிலைமையுடனும், நீதியுடனும் செயற்படுதல் என்பனவே புரிந்துணர்வை வளர்த்துக்கொள்வதற்கான வழிமுறைகள் ஆகும்.

ஆனால், ஆட்சியாளர்கள் இவற்றிற்கு மாறாகச் செயற்படுதல் என்பது சமாதான முயற்சிகளைப் பாதிப்பிற்கு உள்ளாக்குபவையாகவே இருக்கும். அதாவது, சிங்களக் குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்தல், வடக்கு -கிழக்கில் நிர்வாக அலகுகளில் உயரதிகாரிகளாக சிங்களவர்களை நியமித்தல், அரசின் சுற்று நிருபங்களைச் சிங்களத்தில் அனுப்புதல் போன்ற விடயங்கள் இத்தகையவையே ஆகும்.

இந்த ரீதியில் அமைந்ததாகவே தற்பொழுது சிங்கக் கொடி ஏற்றுதல் தொடர்பான அறிவிப்பும் உள்ளது. சிறிலங்கா ஆட்சியாளர்கள் இச்சிங்கக் கொடியினைத் தேசியக் கொடியாகக் கூறிக் கொள்ளலாம். ஆனால், இக்கொடியானது, பௌத்த - சிங்களக் கொடியாக, ஒரு பேரினவாத ஆட்சியின் அடக்கு முறைக் குறியீடாகவுமே தமிழ் மக்களினால் பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் உள்துறை அமைச்சின் செயலாளரின் அறிவிப்பானது, தமிழர் மத்தியில் உள்ள சந்தேகத்தினையும், அவநம்பிக்கைகளையும் மேலும் தீவிரமாக்குவதாகவே அமையக்கூடியதாகும். இது, தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் பெரும் இரத்தம் சிந்திப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ள நிலையில், - தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத வகையில் ஆட்சியாளர்கள் தமது கடந்த காலச் சிந்தனைப் போக்கிலும், செயற்பாட்டிலும் ஈடுபடுவதாகவே கொள்ளத்தக்கதாகவுள்ளது.

இந்நிலையானது, தற்போதைய அரசியல் யதார்த்தத்திற்குப் பொருத்தப்பாடானதொன்றல்ல. இலங்கையில் இரு தேசிய இனங்கள் தமது பிரச்சினையைப் பேசித்தீர்த்துக் கொள்ள முயற்சிக்கும் நிலையில், ஒரு இனத்தின் மீது ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மேலாதிக்கத்தைத் திணிக்க முயல்வது பொருத்தப்பாடான தொன்றாக இருக்கமாட்டாது.

# மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் பைகளில்; புலிகளுக்கு அளித்தவை மட்டும் செயலில்!

### - அரசைச் சாடுகின்றார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

கடந்த தேர்தலின்போது ஐ.தே.க.வினால் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. பிரபாகரனுக்கு அளித்த உறுதிமொழிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளன என மகரகம தேர்தல் தொகுதியில் மக்களுக்கு உதவிகள் வழங்கும் விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஐ.நா.வின் தீர்வு எதுவுமின்றி அமெரிக்கா ஈராக்கை தாக்குகின்றது. இதனால், பல லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு பல நூறு பேர் பலியாகியும், பல கோடி சொத்துக்கள் அழிந்தும் உள்ளன. பாகிஸ்தான், ரஷ்யா,சீனா, பிரான்ஸ் நாடுகள் கண்டிக்கும் போது சமாதானம் பற்றிக் கூறும் ஐ.தே.க. அரசு, இது தொடர்பாக மௌனம் சாதிக்கின்றது.

இந்த அரசு பதவிக்கு வந்து ஒருவருடமும் 4 மாதமும் முடிந்துவிட்டது. அதற்கிடையில் பொருட்களின் விலைகள் உயர்ந்து விட்டன. அரச ஊழியர்களுக்கு எந்தவித சம்பள உயர்வும் வழங்கவில்லை. ஓய்வூதியத்தில் மண்போடுகின்றது.

புலிகள் கேட்பதைக் கொடுத்தால் தென்பகுதி மக்கள் ரணிலை பதம்பார்ப்பர். இந்த அரசு பல மில்லியன் கோடி ரூபாய்களைக் கொடுத்து எமது கட்சியினரை விலைக்கு வாங்கியிருக்கின்றது. அவர்கள் நன்றாகச் சாப்பிட்டு உடலைச் சுகமாக்கி வைத்திருப்பது மட்டுமே அரசு செய்துள்ள வேலை என அவர் மேலும் கூறினார்.

# சிஹல உறுமயவுக்கும் வானொலிச் சேவை; ஆராய அரசாங்கம் முன்வந்தது!

(கொழும்பு)

சிஹல உறுமய கட்சி வானொலிச் சேவையை நடத்துவதற்கு அனுமதிப்பது தொடர்பாக ஆராய அரசு முன்வந்துள்ளது.

தமது கட்சிக்கும் வானொலிச் சேவையை நடத்த அனுமதிக்குமாறு மூன்று மாதங்களுக்கு முன் சிஹல உறுமய கோரியிருந்தது. இதனை அடுத்து மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளரை சந்திப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என கட்சியின் செயலர் உதய கமன்பில தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 4ம் திகதி சந்திப்பதற்கு ஏற்பாடாகியுள்ள நிலையில் கட்சியின் சட்ட ஆலோசகர்,விஞ்ஞானி ஆகியோரும் இந்தச் சந்திப்பின் போது கலந்து கொள்ளவுள்ளனர்.

## கடற்படையை போற்றும் சம்பிக்க

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினர் இதுவரை விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே செயற்பட்டு வந்துள்ளனர். அவர்களைப் பாராட்ட வேண்டும். இவ்வாறு ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

விமானப் படையினர் புலிகளை ஏற்றி இறக்கியும் அவர்களுக்கு வேண்டிய பொருட்களைக் கொண்டு சென்றும் உதவியளிக்கின்றனர். இதற்கு அரசு பதில் கூறவேண்டும் என்று கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கூறினார்.

## 21லட்சம் கிலோ தேயிலை விற்கமுடியாது தேக்கம்!

21 லட்சம் கிலோகிராம் தேயிலையை விற்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு தேயிலை சந்தையில் 36 இலட்சம் கிலோ கிராம் தேயிலை விற்பனைக்காக விடப்பட்ட போதிலும் 15இலட்சம் கிலோ கிராம் தேயிலையே விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கா ஈராக் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல் காரணமாகவே தேயிலை விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் தேயிலையில் ஐம்பது சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில் 21 வீதம் ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

## தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் அண்மையில் இடம்பெற்றது.

வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் க.பொன்னுத்துரை தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தலைமை உரையினைத் தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாட்டறிக்கை வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து கருத்துரைகளும் சிறப்புரைகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் வட்டக்கச்சிப் பிரதேச ஊரக கோட்ட தேசிய எழுச்சிப் பேர வையினர் கலந்து கொண்டனர்.

# உலக சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சி இங்கு யுத்தத்தைக் காண்பித்து உயர்வு!

### -பொ.ஐ.மு ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பா ஒன்று 40 இலிருந்து 28 அமெ. டொலர்களாக குறைந்துள்ள போது அரசாங்கம் ஈராக் யுத்தத்தைக் காரணம் காட்டி எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது என பொ.ஐ.மு. அரசின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைந்தவுடன், எரிபொருள் விலைகள் குறைக்கப்படும் எனக் கூறும் அரசு இப்போது விலைக் குறைப்புச் செய்யாது மக்களைக் கஷ்டத்துக்குள்ளாக்குகிறது என்று கூறும் அமுனுகம, அரசு உடனடியாக விலைகுறைப்பின் நன்மையை மக்கள் அனுபவிக்க வழி செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

## வங்கிக் கொள்ளை முறியடிப்பு

தென்பகுதியிலுள்ள பாலகம மக்கள் வங்கியில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவம் ஒன்று அங்கு கடமையிலிருந்த பாதுகாவலர்களால் தடுக்கப்பட்டுள்ளது. கடந்த 28ம் திகதி பி.ப.1.30 மணியளவில் துப்பாக்கிகளுடன் வந்த சிலர் வங்கிக்குள் ஊடுருவ முற்பட்டனர். இவ்வேளையில் அங்கு துப்பாக்கிச் சமர் ஏற்பட, அங்கு நின்ற வாடிக்கையாளர்கள் சிதறி ஓடினர். இம்மோதலின் போது வங்கிப் பாதுகாவலர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொள்ளையர்கள் தப்பிச்சென்றுள்ளனர்

## யாழ். இல் சர்வதேச மீள்குடியமர்வு அமைப்பின் கிளை திறப்பு

சர்வதேச மீள்குடியமர்வு நிறுவனம் என்றஅமைப்பு எதிர்வரும் 03 ஆம் திகதி யாழ். கச்சேரியில் தனது கிளை நிறுவனத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை சிரான் அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. (23)

- பொடோவில் வை.கோ. கைதானதிற்கு எதிரான வழக்கில்-

# தான் வழங்கிய பிரமாணப்பத்திரத்தில் மாற்றம் செய்ய மத்திய அரசு முடிவு?

(புதுடில்லி)

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலர் வை.கோ 'பொடோ' சட்டத்தின் கீழ் கைது செய்து சிறை வைக்கப்பட்டிருப்பது சம்பந்தமான உச்ச நீதி மன்றத்தில் உள்ள வழக்கில் நேற்று முன்தினம் மத்திய அரசு தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் தவறு இருக்கின்றது. இது சரி செய்யப்படுகின்றது என்று மத்திய சட்ட அமைச்சர் அருண்ஜெக்லி தெரிவித்துள்ளார்.

திருமங்கலம் பொதுக் கூட்டத்தில் வை.கோ.பேசியதற்கு 'பொடோ' சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கத்தேவை யில்லை. என்று அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு மதுரை திருமங்கலத்தில் வை.கோ. தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியது பொடோ சட்டத்தை மீறிய செயலாகும் என்று நேற்று முன்தினம் மத்திய அரசு உச்ச நீதி மன்றத்தில் கூறி இருந்தது.

இதையடுத்து தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியின் அறிவுரையின்படி மத்திய அமைச்சர் ரி.ஆர்.பாலு டில்லி தேசிய சனநாயக கூட்டணி கூட்டத்தில் மத்திய அரசின் நிலைக்கு வலுவான ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

பிரதமர், துணைப்பிரதமர் மற்றும் சட்ட அமைச்சருடன் ரி.ஆர் .பாலு இது பற்றிப் பேசினார்.

இதை அடுத்து சட்ட அமைச்சர் அருண்ஜெக்லி மத்திய அரசின் மனுவில் திருத்தம் செய்யப்படும் என்று கூறினார்.

மத்திய அமைச்சர் மு.கண்ணப்பனும் இதுதொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. கைது சம்பந்தமாக மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்த எதிர்மனுவில் மத்திய அரசின் கொள்கைக்கு மாறுபட்ட சில தவறுகள் உள்ளன. அவை திருத்தப்படும் என்று மத்திய சட்ட அமைச்சர் அருண் ஜெக்லி குறிப்பிட்டதாகவும். அத்துடன் வை.கோ.வின். பொதுக்கூட்டப் பேச்சு "பொடோ" சட்டத்தின் பிரிவுகளுக்கு உள்ளாகாது என்றும் கண்ணப்பன் அதில் தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தில் இன்று தனது நிலையை தெளிவுபடுத்த இருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது என்பதை வி.ஜே.வி. தலைவர் வெங்கையா நாயுடுவும் உறுதிசெய்தார்.

டில்லியில் நடைபெற்ற தேசிய சனநாயக கூட்டணியின் முக்கிய கூட்டத்தின் பின் நேற்று அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பொடோ சட்டம் நாட்டின் தற்போதைய நிலையில் அவசியமானது. ஆனால் வை.கோ. விடயத்தில் அது தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவும் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

## தேசிய....

படைத்துள்ளோம். பல துன்பங்களையும் வேதனைகளையும் கடந்து இன்று உறுதியான வலுவான நிலையை விடுதலைப் போராட்டம் அடைந்துள்ளது.

இன்றைய சமாதான காலத்தில் சிறிலங்கா அரசு தனது படைபலத்தை கட்டியெழுப்பி வருகின்றது. வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்து வருகின்றது.

இந்தக் காலகட்டத்தில் தான் இந்த மகளிர் மாநாடு இடம்பெற்றது. இது ஒரு முக்கியமான மாநாடு.

இந்தப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கக்கூடிய காலம் இது. தமிழீழத்தில் வாழும் அனைத்து மக்களும் ஒன்றாக நிற்பதன் மூலமாகத்தான் நாங்கள் இந்த சமாதான காலத்தில் வெற்றிகளைப் பெறமுடியும்.

இந்தவிடுதலைப் போராட்டத்திற்காக பதினெட்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களையும் எண்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களையும் இழந்திருக்கின்றோம். நாம் இன்று வாழ்க்கைக்கான போராட்டத்தை நடத்தி வருகின்றோம். போராடாமல் வாழ முடியாது என்ற நிலையில் எமக்கு மேல்அடக்கு முறைகள் திணிக்கப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையை விளங்கிக்கொண்டு தலைவர் அவர்களின் கரங்களைப் பலப்படுத்துவதன் ஊடாக நாங்கள் பெரும் வெற்றிகளை அடைவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

-கொல்லப்பட்ட தமது மீனவர்களுக்கு-

# சிரிலங்கா அரசிடம் சீனா நஷ்டஈடு கோருகிறது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன மீன்பிடிக்கலம் தாக்கப்பட்டதில் உயிரிழந்த மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்று சீன அரசு சிறிலங்காவைக் கேட்டுள்ளது.

தற்போதைய சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் விதத்தில் எந்த வித செயற்பாட்டிலும் இறங்காது என்று உறுதி வழங்கிய சீனா இச்சம்பவம் குறித்து தமது கடுமையான உணர்வலைகளை தெரிவித்துள்ளது..

## நோபல்...

ஆளும் அரசை கடுமையாக விமர்சித்துள்ளார்.

தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆளும் கட்சியிலிருக்கின்ற பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவில்லையென அவர் மேலும் கூறியுள்ளார். நடைபெற்று வருகின்ற பேச்சுவார்த்தையில் எந்த வித முன்னேற்றமும் எட்டப்பட வில்லையெனக் குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போதைய அரசு ஆட்சியில் தொடர்ந்தும் இருப்பதையே முதன்மையாகக் கொண்டு செயற்பட்டு வருவதாகவும் இதற்காக பெருமளவான பணம் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## காருடன்...

யில் நடைபெற்றுள்ளது.

ஸ்தலத்திற்கு விரைந்த கிளிநொச்சி காவல்துறை வாகன போக்குவரத்துப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டதுடன் இருவாகனங்களையும் கிளி. காவல் பணிமனையினர் தடுத்து வைத்துள்ளனர். இன்று இருவாகனங்களையும் கிளிநொச்சி நீதிமன்றில் கிளி. காவல்துறையினர் முற்படுத்தவுள்ளனர்.

இதேவேளை, சம்பவம் நடந்தவுடன் மோட்டார் கார் சாரதி அவ்விடத்தைவிட்டுத் தலைமறைவாகி விட்டதாகவும் சாரதியைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

(சோ.லோ)

## அமெ....

பொதுமக்கள் மீது சிறிது சந்தேகப்பட்டாலும் அவர்கள் தாக்கப்படும் நிலை உருவாகி விட்டது என்று அமெரிக்க படைஅதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அலுஜோக்கர் அல் - உமாலி எனப்படும் அந்த ஈராக்கியத் தற்கொலை வீரருக்கு மரணத்துக்கு பின்னான விருதுகளை அவரது குடும்பத்தினரிடம் சதாம்ஹுசைன் வழங்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்கொலைத் தாக்குதல் பற்றி தெரிவித்த ஈராக்கிய துணை அதிபர் தாகாயாசீர்ரம்ழான். இது அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்க்க மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒருங்கிணைந்த முயற்சி எனவும் ஒரு தற்கொலைத் தியாகியின் மூலம் 5000 எதிரிகளை ஒழிக்கும் நடவடிக்கை தொடக்கப்பட்டுள்ளது என்றார்

இதனிடையே அமெரிக்க வீரர்களை இலக்காகக் கொண்டு ஈராக் மேற்கொண்டு வரும் தற்கொலைத் தாக்குதலை பயங்கரவாதச் செயல் என அமெரிக்க சனாதிபதி புஷ் கண்டித்துள்ளார்.

## பாக்தாத்.....

ஏற்படுத்தியுள்ளதாகவும் - இதனால் ஆத்திரத்திற்குள்ளாகிய அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடம், சரமாரியான விமானக்குண்டு வீச்சு மற்றும் ஏவுகணைத் தாக்குதலுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத்தாக்குதல்களினால் பாக்தாத் நகரம் பெரும்சேதத்திற்குள்ளாகியுள்ளதாகவும் கட்டடங்கள் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளதாகவும் கூறப்படுகின்றது இத்தாக்குதலுக்கு அமைச்சுக் கட்டடங்கள், ஈராணுவத் தளங்கள் உட்பட பொதுமக்களின் கட்டடங்களும் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இதேவேளை, பாக்தாத்தில் அமெரிக்காவும், பிரிட்டிஷ் படையினரும் அடையாளங் காணப்பட முடியாத எதிரியை வழக்கமல்லா போரில் எதிர்கொண்டு வருவதாக பி.பி.சி. கூறியுள்ளது.

நஜாப் நகரில் சீருடை அணியாத கிதாயின் எனப்படும் அமைப்புச் சார்ந்த மக்களுக்கு எதிராக அமெரிக்கப் படைகள் தீவிரமாக சண்டையிட்டு வருகின்றன. 3 அமெரிக்க டாங்கிகள் நெருப்புப்பிடித்து எரிவதை ஈராக்கிய தொலைக்காட்சி காட்டியுள்ளது. தாக்குதலுக்குப் பின் அந்த டாங்கிகளை விட்டுவிட்டு படைகள் ஓடிவிட்டதாக ஈராக் கூறுகின்றது.


## உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக முல்லை. மாவட்ட மாணவர் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு பின்வரும் நாட்களில் பின்வரும் இடங்களில் நடைபெறும்.

**புதுக்குடியிருப்பு ம.வி. -**

திங்கள் மு.ப. 11.30 - இரவு 9.00 வரை
செவ்வாய் காலை 6.30 -இரவு 9.30 வரை
புதன் காலை 6.30 - மதியம் 12.30 வரை

**கிளிநொச்சி, கனகபுரம் ம.வி.**

திங்கள் மு.ப. 11.30- இரவு 9.00 வரை
செவ்வாய் காலை 6.30 -இரவு 9.30 வரை
புதன் காலை 6.30 - மதியம் 12.30 வரை

*குறிப்பு:*
*ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஆசிரியர்களால் இறுதியாக தயாரிக்கப்பட்ட பரீட்சை மாதிரி வினாத்தாள்களின் மீட்டல் நடைபெறும். இதில் இம்முறை பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து மாணவர்களும். 2004 இல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

**முல்லை. மாவட்ட மாணவர் ஒன்றியம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(சி- 7821)



## சகல நோய்களுக்குமான இலவச சிகிச்சை முகாம்

**இடம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி**
**காலம் - 4,5 சித்திரை 2003 (வெள்ளி, சனி)**

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் விசேட நிபுணர்களால் நடாத்தப்படும் இம்முகாமில் சிகிச்சை மேற்கொள்ள இருப்பவர்கள் தங்கள் அருகிலுள்ள வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியின் சிபாரிசுக் கடிதத்துடன் சமுகமளிக்கவும்.

**பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை,**
**கிளிநொச்சி.**

(சி-8042)



இப்பத்திரிகை கிளிநொச்சி, ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.